**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**சாட்சிகளின் வாக்குமூலம்**

**(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை முறை சட்டம்)**

**அமர்வு வழக்கு எண். :104/2022**

**நாள்: 02.04.2026**

**அரசு தரப்பு சாட்சி** : அன்புபிரகாஷ்

( A1, A5 A6 ஆஜர் இல்லை, A2, A3, A4, A7 ஆஜர் கு.வி.மு.ச.பிரிவு 317 ன் படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. )

**சாட்சி மனு உத்தரவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.**

<u>1 முதல் 7 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

வழக்கு கோப்பை விசாரணைக்கு எடுக்கும்போது அனைத்து ஆவணங்களையும் பரிசீலனை செய்து தான் விசாரணைக்கு எடுப்பேன் என்றால் முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் மனுவினை பரிசீலனை செய்து எனது புலன் விசாரணையை ஆரம்பிப்பேன். அதற்கு முன்பு வழக்கு கோப்பு எதுவும் தயார் செய்யப்படுவது இல்லை. முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.16 ல் வளர்மதியின் கணவர் கருப்பையா மது அருந்தி இருந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் புகார்தாரரிடம் நகல் கொடுக்கப்பட்டதாக கையொப்பம் பெறப்படவில்லை என்றால் சரிதான். வளர்மதி கனிராஜனிடம் தொலைபேசி மூலம் தகவல் சொன்னதாக முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு எந்த தொலைபேசி எண்ணில் இருந்து எந்த தொலை பேசி எண்ணிற்கு பேசப்பட்டது என்பதை பொறுத்து நான் விசாரணை செய்து புலனாய்வில் தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். தங்கப்பாண்டியனும், கருப்பையாவும் எந்தஎந்த வாகனங்களில் சென்றார்கள் என்பதை பொறுத்து என் புலனாய்வில் தெரிந்துகொள்ளவில்லை என்றால் சரிதான். கோபாலகிருஷ்ணன் மற்றும்



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.04.02 18:36:47 +0530

கேசவன் ஆகிய இருவரும் பயன்படத்தியதாக சொல்லும் டார்ச்லைட்டை நான் கைப்பற்றி வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இறந்து போன கருப்பையா மற்றும் தங்கப்பாண்டியன் இருவரும் இருவேறு வாகனங்களில் வீரசோழன் சென்று மது வாங்கியதாக கூறப்பட்ட சங்கதிகளை பொறுத்து வீரசோழன் கிராமத்தில் உள்ள எந்த மதுக்கடைக்கு சென்றார்கள் என்பதை பொறுத்து புலனாய்வு செய்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. கேசவன், கோபாலகிருஷ்ணன் ஆகியோர்களை விசாரித்த போது அவர்கள் பார்த்ததாக சொல்லப்படுகிற நபர்களை பொறுத்து அவர்கள் அணிந்திருந்த ஆடைகளின் நிறம், அவர்களது உயரம் மற்றும் நிறம் ஆகியவை குறித்து புலன் விசாரணை செய்து தெரிந்து கொண்டேனா என்றால் இரவு நேரம் என்பதால் டார்ச் லைட்டில் அந்த நபர்களின் முகங்கள் மட்டும் தெரிந்ததாகவும் அவர்களது உடைகளின் நிறம், உயரம் ஆகியவவை தெரியவில்லை என கூறியுள்ளனர். அவ்வாறு முகங்கள் மட்டும் தெரிந்ததாக மேற்படி சாட்சிகள் என் விசாரணையின் போது கூறியுள்ளனரா என்றால் என் விசாரணையில் டார்ச்லைட் வெளிச்சத்தில் ரமேஷ்குமார், சுரேஷ்குமார், கார்த்திகைசாமி ஆகியோர்கள் தெரிந்ததாக கூறியுள்ளார்கள். எந்த வகை கொண்ட டார்ச்லைட் என்பதும், அதனுடைய ஒளி பரவு எல்லை ஆகியவை குறித்து புலனாய்வில் கண்டு கொண்டேனா என்றால் டார்ச்லைட் மட்டும் தெரியவந்தது. டார்ச்லைட் ஆஜர் படுத்தப்படாமல் அதன் ஒளி பரவு எல்லை தெரியவராது என்றும் மேற்படி சாட்சிகள் டார்ச்லைட் வெளிச்சத்தில் அவர்களை பார்த்ததாக நானாக இந்த வழக்கிற்காக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. வளர்மதிக்கு சௌந்திரராஜன் எந்த எண்ணில் இருந்து போன் செய்தார் என்ற விவரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். தங்கப்பாண்டியனும், கருப்பையாவும் கீழநரியன் என்ற ஊரை நோக்கி சென்றார்கள் என்பதற்கான சாட்சிகள் யாரும் இந்த வழக்கில் விசாரிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. வளர்மதி இந்த புகாருக்கு முன்பாக



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.04.02 18:36:50 +0530

அவரது கணவர் இறந்துபோன கருப்பையாவுக்கும், மற்றவர்களுக்கும் ஏதேனும் பிரச்சனையோ சிக்கல்களோ இருந்ததாக புகார் கொடுத்துள்ளாரா என்றால் புகார் கொடுக்கவில்லை. சம்பவ இடத்தில் கிடந்த இரு சக்கர வாகனத்தில் இருந்ததாக சொல்லப்படும் இரத்தக்கரை யாருடைய இரத்தம் என்பதை பொறுத்து ஆய்விற்கு அனுப்பினேனா என்றால் அனுப்பவில்லை. அ.சா.ஆ.15 புகாரில் 17 வது வரியில் " கணவர் வீட்டிற்கு வராததால் நான் கனிராஜசேகரனுக்கு போன் செய்து" என இடைச்செருகலாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.ஆ.15 புகாரில் சாட்சிகளாக இருவரிடம் ஏன் கையொப்பம் பெறப்பட்டுள்ளது என்றால் புகார் கொடுக்க வந்தவர் உடன் இருவரும் வந்து அறிவேன் சாட்சிகளாக கையொப்பம் போட்டுள்ளார்கள். அவர்களை கையொப்பம் போடக்கூடாது என்று தடுக்கும் உரிமை காவல் அதிகாரிகளுக்கு இல்லை. அ.சா.ஆ.2 ல் பார்வை மகஜரில் " இரத்தக்கரை பட்ட " என்பது இடைச்செருகலாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கின் முதல் தகவல் அறிக்கை கமுதி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் 30.07.2021 மாலை 5.15 மணிக்கு பெறப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பவம் 29.07.2021 ம் தேதி நடந்தது என்றும், வழக்கு பதிவு செய்த தேதி 30.07.2021 ம் தேதி என்றால் சம்பவம் நடந்தது 29.07.2021 இரவு 8 மணி முதல் 30.07.2021 காலை 6.30 மணி வரை இடைப்பட்ட சமயத்தில் நடந்தது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வழக்கு சம்பந்தப்பட்ட சான்றுபொறுட்கள் இரத்தக்கரை படிந்த துண்டு, இரத்தக்கரை படிந்த செருப்பு(ஒரு ஜோடி), இரத்தம் பட்ட மண், படாத மண் ஆகியவை 31.07.2021 அன்று நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட வில்லை படிவம் 91 அ.சா.ஆ.20 திருப்பபட்டுள்ளது என்றால் சரிதான். அதன் பிறகு 12.08.2021 அன்று தான் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்தில் கைப்பற்றப்பட்ட வாகனத்தில் முன்பகுதியில் எந்த இடத்தில் இரத்தக்கரை படிந்திருந்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.04.02 18:36:53 +0530

அ.சா.ஆ.6 ஒப்புதல் வாக்குமூலத்தில் 2ம் எதிரி சுரேஷ்குமார் கையொப்பம் போடவில்லை என்றால் சரியல்ல. கையொப்பம் போட்டுள்ளார். கைப்பற்றப்பட்ட கட்டைகளின் நீளம், அகலம் மற்றும் விட்டம் ஆகியவை குறிப்பிடவில்லை என்றால் நீளம், அகலம் குறிப்பிட்டுள்ளேன். விட்டம் மட்டும் குறிப்பிடவில்லை. அ.சா.ஆ.19 வரைபடத்தில் பிரேதம் எந்த இடத்தில் கிடந்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் இடம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பிரேதத்தை பார்ப்பதற்கு வளர்மதி தன் குழந்தைகளை அழைத்துக்கொண்டு போனதாக கூறியுள்ள நிலையில் அந்த குழந்தைகளை சாட்சிகளாக நான் விசாரிக்கவில்லை என்றால் அவர்கள் இளஞ்சிறார்களாக இருந்ததால் அவர்களை நான் தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. வளர்மதி யார்மூலமாக தகவல் கிடைத்து சம்பவ இடத்திற்கு போனார் என்று என் புலன்விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் குறிப்பிட்டு சொல்லவில்லை கணவர் விட்டிற்கு வரவில்லை என்பதால் தேடிச்சென்றதாக சொல்லியுள்ளார். கருப்பையா கொலை சம்பந்தமாக தங்கப்பாண்டியன் மீது சந்தேகம் ஏற்பட்டு அவரை காவல் நிலையத்தில் அழைத்து விசாரித்தாக சொல்வது சரியல்ல. அவரை சாட்சியாகதான் விசாரித்தேன். இந்த வழக்கை பொறுத்து நான் முழுமையாக ஆய்வு செய்யவில்லை என்றால் சரியல்ல. கைப்பற்றப்பட்ட கட்டைகள் எதையும் தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி ஆய்வு அறிக்கை பெறவில்லை என்றால் சரியல்ல.அவ்வாறு அவற்றை ஆய்வு செய்ததாக சொல்லும் அதிகாரியை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கின் புலன்ஆய்வு முழுவதையும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

MEHBUB ALI KHAN A K

Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.04.02 18:36:56 +0530